


பெரம்பலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. முன்னிலையில், பெரம்பலூர் மாவட்டக் கழக துணைச் செயலாளர் முகமது இக்பால் தலைமையில், ஓ.பன்னீரசெல்வம் தலைமையிலான அ.தி.மு.க.வினர் 50க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். இதில் அமைச்சர் சா.சி.சிவசங்கர், எம்.பிரபாகரன், எம்.எல்.ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் - விராலிமலை தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் சிறப்புரை!

புதுக்கோட்டை.ஏப்.5–

விராலிமலை சட்டமன்றத் தொகுதி அலுவலகம் திறப்புவிழா மற்றும் விராலிமலை ஒருங்கிணைந்த ஒன்றிய தி.மு.க. மற்றும் மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது.

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை திறந்து வைத்தார். பின்னர் நடந்த செயல்வீரர் கூட்டத்திற்கு தலைமை வகித்து சிறப் புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

சுண்ணாம்பு அடிப்பது, பெயிண்ட் அடித்தது தான் கடந்து பத்து வருடம் இந்த வேலைகளை தவிர வேறு மக்களுக்கு தேவையான உருப்படியான எந்த பணியும் இங்கு நடைபெற வில்லை. அதைத்தான் நம்முடைய செல்லப்பாண்டியன் சொன்னார். கலை அறிவியல் கல்லூரி கொண்டு வர வேண்டும் என்று நினைத்திருந் தால் கொண்டு வந்திருக்கலாம் அவர் நினைத்திருந்தால் கொண்டு வந்திருக்க முடியுமா இல்லையா? பத்தாண்டு கால ஆட்சியிலே ஏன் கொண்டுவரவில்லை? தன்னுடைய கல்லூரி பாதிக்கப்படும் என்பதற்காக அரசுக் கல்லூரி கொண்டு வர வில்லை. அரசுக் கல்லூரியில் கட்டணம் கிடையாது. அதனாலே கொண்டு வரவில்லை. ஆனால் நாங்கள் சுயநலம் பார்க்கவில்லை. பொது நலம் பார்த்தோம். அதனாலே எங்கள் (திருமயம்) கல்லூரிக்கு அருகிலேயே பத்து இருபது கிலோ மீட்டரிலேயே திருமயம் தொகுதியில் துளையானூர் என்ற ஊரிலே மக்களுடைய நலனுக்காக கலை அறிவியல் கல்லூரியை கொண்டு வந்தோம். அங்கே ஆயிரம் பேர் படிக்கிறார்கள். நாங்கள் அரசு கலை அறிவியல் கல்லூரி அங்கு கொண்டு வரவில்லை என்றால் அங்கு படிக்கும் 1000 பேரில் குறைந்தது 500 மாணவர்களாவது எங்கள் கல்லூரியில் படிப்பார்கள். ஆனால், நாங்கள் எங்களை பற்றி சிந்திக்க வில்லை. பொது மக்களை பற்றி சிந்தித்தோம். ஆனால் இங்கே இருப்பவர் தன்னைப் பற்றி சிந்தித்தார். பொது மக்களை பற்றி சிந்திக்க வில்லை. எனவே இதுதான் எங்களுக்கும் அவருக்குமான வித்தியாசம். எனவே இந்த வித்தியாசத்தை இந்த இடைவெளியை நிவர்த்தி படுத்த விராலிமலை க்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற்றுத்தர தி.மு.க. வேட்பாளர் செல்லப்பாண்டியனுக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.இந்த விழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லபாண்டியன், தஞ்சாவூர் துணை மேயரும் விராலிமலை தொகுதி பார்வையாளருமான அஞ்சுகம் பூபதி ஆகியோர் சிறப்புரையாற்றி னர். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைவர்கள் பெனாட் அந்தோணிராஜ் (காங்), சங்கர்(மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட்), செங்கோடன் (இந்திய கம்யூனிஸ்ட்), எஸ்.கே.கலியமூர்த்தி (மதிமுக),

கார்த்திகேயன் (தேமுதிக), மு.அறிவொளி (தி.க), சரஸ்வதி (விசிக), எஸ்.ஏ.முகம்மது அஸ்ரப் அலி (இ.யூ.முஸ்லீக்), அப்துல் கனி (மமக), எம்.ராஜகோபால் (ம.நீ.ம), முகம்மது ஜான் (ம.ஜ.க), மு.அப்துல் ஜப்பார் (ஆம் ஆத் மீ), கார்த்தி (முக்குலத்தோர் புலிப்படை), சலாகுதீன் (எஸ்.டி.பி.ஐ), ஆர்.தர்மதுரை (தமிழர் தேசம் கட்சி),


மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திரசேகரன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், எம்.கோவிந்தராஜன், பேரூர் செயலாளர்கள் வை. விஜயக்குமார், முகம்மது ரிஷா , பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் செ. குறிஞ்சிவாணன், தலைமைக் கழக பேச்சாளர் சொ.தமிழினியன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, வழக்கறிஞர் சிவா, விளாப்பட்டி சிவா, கை.பழனிச்சாமி, ராயல் சபா, தாயினிப்பட்டி கண்ணன், தேன்கனிப்பட்டி ராஜா, ஓ. ஆறுமுகம், எம்.ஆர்.அன்பழகன், மெடிக்கல் குமார், என்.எஸ்.கே.நல்லதம்பி, என்.வீராச்சாமி, சண்முகசுந்தரம், ஐஸ் கணேசன் உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் கட்சியினர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஒன்றிய செயலாளர்கள் மு.பி.ம.சத்தீயசீலன் அ.இளங்குமரன் ஆகியோர் வரவேற்றனர். முடிவில் மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் நன்றி கூறினார்.

## தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# திருவிடைமருதூர் - கும்பகோணம் - பாபநாசம் தொகுதிகளுக்கு தேர்தல் பணிக்குழு!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தஞ்சாவூர், ஏப்.5–

நடைபெற உள்ள 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர் – கும்பகோணம் – பாபநாசம் ஆகிய தொகுதிகளுக்கு கழக நிர்வாகிகளை தேர்தல் பணிக்குழுவினராக நியமித்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ, அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மீண்டும் மக்கள் போற்றும் திராவிட மாடல் ஆட்சி 2.0 தொடர வருகின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெறும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர் – கும்பகோணம் – பாபநாசம் ஆகிய தொகுதிகளில் களப்பணியாற்றிட பின்வருமாறு கழக நிர்வாகிகளை கொண்ட தேர்தல் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல்பணிக்குழுவில் உள்ள நிர்வாகிகள் உடனடியாக தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு நேரில் சென்று களப்பணியாற்றிட வேண்டுகிறேன்.

**திருவிடைமருதூர் தொகுதி**

முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது, ஒன்றியச் செயலாளர்கள், சுந்தரஜெயபால், கோ.க.அண்ணாதுரை, சி.அம்பிகாபதி, மிசா என்.மனோகரன், ஆர்.உதயசந்திரன், எஸ்.சரவணன், பேரூர் செயலாளர்கள், எஸ்.கே.பஞ்சநாதன், வ.மகாலிங்கம், டி.எம்.சப்பாணி, கோ.சி. இளங்கோவன், இரா.கோபாலகிருஷ்ணன்.

**கும்பகோணம் தொகுதி**

மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜெ.நடராஜன், ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், சு.க.முத்து செல்வம், இரா.சுதாகர், பகுதிச் செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், பேரூர் செயலாளர்கள் சீ.தாமரைச் செல்வன், ஜெ.ஜப்ருதீன்.

**பாபநாசம் தொகுதி**

முன்னாள் எம்.எல்.ஏ. எம்.ரெங்கசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி.இரா.தெட்சிணாமூர்த்தி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஒன்றியச் செயலாளர்கள் கோ.தாமரைச் செல்வன், தியாக.சுரேஷ்குமார், பி.எஸ்.குமார், என்.நாசர், பேரூர் செயலாளர்கள் எஸ்.எம்.எஸ்.பாலசுப்ரமணியன், டி.பி.டி.துளசி அய்யா, ச.கபிலன், வி.சீனிவாசன், தியாக. ரமேஷ்

மேற்கண்ட தேர்தல் பணிக்குழுவினருடன் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளின் தேர்தல் பணியாற்றிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.





சேலம் கிழக்கு மாவட்ட கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் கு.சின்னதுரை அறிமுகம் கூட்டம் கெங்கவல்லி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., மத்திய மாவட்ட செயலாளர் அமைச்சர் இரா. ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வேட்பாளர் அறிமுகம் செய்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போது தே.மலையரசன் எம்.பி., மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் சாத்தப்பாடி மணி, அழகு வேல், சித்தார்த்தன், பாலமுருகன், மற்றும் பேரூர் செயலாளர்கள், திமுக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக புதுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| **5.4.2026 ஞாயிற்றுக்கிழமை** | | |
| காலை 10.00 மணி | விராலிமலை | செக்போஸ்ட், விராலிமலை. |
| காலை 11.00 மணி | புதுக்கோட்டை | திலகர் திடல், புதுக்கோட்டை. |
| மாலை 4.00 மணி | ஆலங்குடி | வடகாடு முக்கம், ஆலங்குடி. |
| மாலை 5.00 மணி | பேராவூரணி | வேதாந்தம் திடல், பேராவூரணி. |
| மாலை 6.00 மணி | பட்டுக்கோட்டை | அஞ்சாநெஞ்சன் அழகிரி சிலை அருகில், பட்டுக்கோட்டை. |
| இரவு 7.00 மணி | ஒரத்தநாடு | அண்ணா சிலை அருகில், ஒரத்தநாடு. |
| இரவு 8.30 மணி | தஞ்சாவூர் | காமராஜர் சிலை அருகில், தஞ்சாவூர். |
| **6.4.2026 திங்கள்கிழமை** | | |
| காலை 10.00 மணி | திருவையாறு | தேரடி திடல், திருவையாறு. |
| காலை 11.30 மணி | கும்பகோணம் | காந்தி பார்க், கும்பகோணம். |
| மாலை 4.00 மணி | திருவிடைமருதூர் | கடைவீதி, பந்தநல்லூர். |
| மாலை 5.00 மணி | ஜெயங்கொண்டம் | அண்ணா சிலை அருகில், ஜெயங்கொண்டம். |
| மாலை 6.30 மணி | குன்னம் | கடைவீதி, குன்னம். |
| இரவு 8.00 மணி | உளுந்தூர்பேட்டை | அண்ணா சிலை அருகில், உளுந்தூர்பேட்டை. |

**7.4.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தொகுதிகள் | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர். | மரப்பாலம், முதலியார்பேட்டை. |
| காலை 10.45 மணி | வில்லியனூர், திருபுவனம், மங்கலம். | கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர். |
| காலை 11.30 மணி | நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்கிராமம், ராஜ்பவன். | அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை–18
நாள் : 3.4.2026

கலைஞர் 100 1924 - 2023





சேலம் கிழக்கு மாவட்டம் ஏற்காடு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் கழக வேட்பாளர் டி.எம்.ரேவதி மாதேஸ்வரன் அறிமுகக் கூட்டம் ஏற்காட்டில் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு வேட்பாளரை அறிமுகம் செய்து பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர் ராஜா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேலக்கொரை, நெடுகுளா, சுண்டட்டி, கிழிஞ்கரை, பாமுடி, கோடமலை, பெல்லட்டி மட்டம்,எமகுண்டு, அளக்கரை ஆகிய க பகுதிகளில் குன்னூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் கே.எம். ராஜ் கழக சாதனைகளை எடுத்துரைத்து பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பீமன், பிரேம்குமார், நெல்லை கண்ணன், காங்கிரஸ் வட்டாரத் தலைவர் சில்லா பாபு, CPI மாநில தலைவர் பெள்ளி உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.